## ரூ.100 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாத் தலங்கள் நவீனப்படுத்தப்படும்!

# தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிப்பு!

## சட்டப்பேரவையில் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் பெருமிதம்!

**சென்னை, ஏப்.20–**

**சட்டப்பேரவையில் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தமிழ்நாட்டின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாயிருக்கின்றன என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பதிலுரை வருமாறு :–**

மக்களாட்சித் தத்துவத்தை நிலை நிறுத்த உயர்மட்டக் குழு அமைத்தவர் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மாற்றுத் திறனாளி மக்களை அதிகாரம் பொருந்தியவர்களாக உயர்த்துவதுதான் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கமென்று, 14,000 மாற்றுத் திறனாளிகளை ஊரக உள்ளாட்சி மற்றும் நகராட்சி அமைப்புகளில் தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்படுவதற்கான சட்டமுன்வடிவுகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்த முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு மாற்றுத் திறனாளிகளுக்கு பொற்காலமாகும். தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் செயலை எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரை சென்று வழக்கு தொடுத்து, தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் வகையிலும், கூட்டாட்சிக் கருத்தியலின் மகத்துவத்தை நாடெங்கும் பரப்பிடும் வகையிலும் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினைப் பெற்று, இந்திய அரசியல் வரலாற்றில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

துணை முதலமைச்சர் அவர்கள், எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட நாயகரின் இலட்சியப் பயணத்தில் தோளோடு தோள் கொடுத்து, 'களம் நமதே, போராடு; பாதை இல்லையென்றால் நீயே பாதையை உருவாக்கு; வெற்றி பெறு' என்கிற இலட்சிய வேட்கையோடு வெற்றி வாகை சூடி வரும் எங்கள் இளம் தலைவர்; விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டைப் பொற்காலம் காணச் செய்த செயல் வீரர்; தாய் மறந்தாலும் தந்தை மறந்தாலும் தனயன் மறக்க மாட்டார் என்ற உறுதிமொழியோடு, விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியினர், முதியோர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோர் சமூகப் பொருளாதாரத்தில் மேம்படுவதற்கு ரூ.25 கோடி வாழ்வாதார நிதியளித்திட உதவிக்கரம் நீட்டி, மாற்றுத் திறனாளிகளின் சுய சார்பு, சுதந்திரம், முன்னேற்றம் பெற அயராது உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலம்; துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

நீர்வளத் துறை அமைச்சர், அவை முன்னவர் துரைமுருகன் , கே.என். நேரு , இ. பெரியசாமி , முனைவர் பொன்முடி , பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ. வேலு , அமைச்சர் பெருமக்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் தங்கம் தென்னரசு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் சுற்றுலா குறித்து கூறுகிறபோது, "பயணங்கள் மனிதனை அறிவு பெறச் செய்கின்றன. உலகத்தை பார்க்காமல் இருக்கின்றவன் அறியாமையில் மூழ்கி இருப்பான் என்றும், "அறிவு என்பது நூல்களில் மட்டும் கிடைக்காது. அனுபவத்திலும் கிடைக்கும். எனவே, பயணங்கள் மேற்கொள்ளுங்கள். அதன் மூலமே மனிதன் பல்வேறு கலாச்சாரங்களை அறிந்து சமுதாய மாற்றங்களை புரிந்து கொள்ள முடியும் என்றும், "ஒரு மனிதன் உலகத்தை அறிய பயணம் அவசியம் என்றும் கூறியுள்ளார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சுற்றுலா பற்றி கூறுகிறபோது, "சுற்றுலா கல்வியையும், அனுபவத்தையும் சேர்த்துத் தரும் ஒரு அரிய வாய்ப்பாகும் என்றும், "பழமையான கலாச்சாரங்களைக் காணவும், புதிய வரலாற்றுச் செய்திகளை அறியவும் சுற்றுலா அவசியம். தமிழர்கள் பலநாடுகளுக்கு சென்று பழம்பெரும் பண்பாடுகளை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார். மேலும், "சுற்றுலாவை அறிவு திரட்டும் ஒரு செயலாகவும், மனிதர்கள் ஒன்றிணைவதற்கான ஒரு பாலமாகவும், நாட்டின் வளர்ச்சிக்கான ஒரு முக்கிய கருவியாகவும் கருதினார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சுற்றுலா பற்றி கூறுகிறபோது, சுற்றுலா என்பது உணவை நுகர்வது மட்டுமல்ல; உணர்வைப் பகிர்வதும்தான்; அலைகளை தரிசிப்பது மட்டுமல்ல; கலைகளை ரசிப்பதும் தான்; பாட்டைக் கேட்பது மட்டுமல்ல; பண்பாட்டைக் காப்பதும்தான் என்றார். தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் கூறும்போது, "சுற்றுலா என்பது வெறும் மகிழ்ச்சிக்கான பயணம் மட்டுமல்ல, அது பண்பாட்டையும், வரலாற்றையும் உலகறியச் செய்வதற்கான ஒரு சாளரம் என்றும், "தமிழ்நாட்டின் பெருமையினை உலகறியச் செய்ய சுற்றுலாத் துறையை நாம் உன்னதமாக வளர்க்க வேண்டும் என்றும், "தமிழரின் கலை, கலாச்சாரம், வரலாறு உள்ளிட்டவை சுற்றுலா வாயிலாக உலக நாடுகளுக்குப் பரவ வேண்டும். என்றும் கூறினார்கள்.

### தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை!

தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை, 2023: முதலமைச்சர், தலைவர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா கொள்கை, 2023–ஐ உருவாக்கி வெளியிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாவை தொழிற்துறையாக அறிவித்துள்ளார்கள். இந்தக் கொள்கையின் மூலம், இலட்சிய இலக்கான ஒரு டிரில்லியன் டாலர் என்ற பொருளாதார வளர்ச்சியை 2030 ஆம் ஆண்டுக்குள் நனவாக்குவதற்கு சுற்றுலாவின் ஆற்றலை ஒரு முக்கிய ஊக்கியாகப் பயன்படுத்தி, தமிழ்நாடு அதன் இலக்கினை அடைய இயலும் என்று முதலமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

சுற்றுலா வளர்வதற்கு ஏற்ற இடம் தமிழ்நாடே! இயற்கைச் செல்வம், தொன்மைச் சிறப்பு, பண்பாட்டு முதிர்ச்சி, கலை வளம், மொழி வளம், மலை நகர்கள், வனங்கள், காடுகள், வன விலங்குகள், பறவைகள், பசுமை நிறைந்த சமவெளிகள், வளம் பெருக்கும் ஆறுகள், அருவிகள், நீண்ட வெண்மணற் கடற்கரைகள், உப்பங்கழிகள், கால்வாய்கள், வானுயர்ந்த கோபுரங்கள்கொண்ட கோயில்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், அற்புதக் கைவினைப் பொருள்கள், பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பரதம், கேட்கக் கேட்கத் தெவிட்டாத இசை, கிராமியக் கலைகள் போன்ற பல்வேறு வளங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இச்சிறப்பினை,

"செல்வம் எத்தனை உண்டு புவிமீதே
அவையாவும் படைத்த தமிழ்நாடு
என்று பாரதியார் பாடியுள்ளார்.

உலகத்தாரை கவரும் சுற்றுலாத் தலங்கள்!

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. தமிழ்நாடு 43,283–க்கும் மேற்பட்ட பழமையான கோயில்களைக் கொண்டிருக்கிறது. 1,076 கி.மீ. நீளமுள்ள நீண்ட கடற்கரை, 18 வனவிலங்கு சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 5 புலிகள் காப்பகங்கள், யுனஸ்கோவால் உலகப் பாரம்பரியச் சின்னங்களாக அறிவிக்கப்பட்ட 6 தலங்கள் உள்ளிட்ட உலகோரைக் கவரக்கூடிய பல்வேறு சுற்றுலாத் தலங்களைத் தன்னகத்தே கொண்டு தனிச் சிறப்போடு விளங்குகிறது.

## பூம்புகாரில் கூடுதல் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள்!

அடுத்த ஐந்து ஆண்டுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாவின் பங்களிப்பை 12 சதகிதமாக உயர்த்துதல், தமிழகத்தில் சுற்றுலா மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் 25 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற குறிக்கோள்களுடன் சுற்றுலாக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துதல், சுற்றுலா வளர்ச்சி மாநாடுகளை நடத்துதல்–பங்கேற்றல், முதலீடுகளை ஈர்த்தல், கலைத் திருவிழாக்கள் நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் கவனமும், திறமையும்மிக்க செயல்பாடுகளால் மற்றும் வழிகாட்டுதல்களால் தமிழ்நாடு சுற்றுலாத் துறை புத்துயிர் பெற்று வருகிறது. 2020 ஆம் ஆண்டு 14.18 கோடியாக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 30 கோடியே 68 இலட்சத்து 42 ஆயிரத்து 14 ஆகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 இலட்சத்து 61 ஆயிரத்து 302 ஆகவும் உயர்ந்துள்ளது.

ஆகமொத்தம் 2024 ஆம் ஆண்டில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 30 கோடியே 80 இலட்சத்து 3 ஆயிரத்து 316–ஆக உயர்ந்துள்ளது. மேலும், பல கோடி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க திட்டமிட்டு, பல்வேறு திட்ட செயலாக்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பல்வேறு பன்னாட்டு, தேசிய விருதுகளை வாங்கி குவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையால், தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது.



யுனெஸ்கோவினால் அறிவிக்கப்பட்ட பாரம்பரிய களங்கள் தமிழ்நாட்டில், மாமல்லபுரம், தஞ்சைப் பெருவுடையார் கோயில், கங்கைகொண்ட சோழபுரம், ஐராவதேஸ்வரர் கோயில், நீலகிரி மலை இரயில் பாதை, மேற்கு தொடர்ச்சி மலைத் தொடர் ஆகியவை உலக பாரம்பரியக் களங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. அய்யன் திருவள்ளுவர் சிலை. முதலமைச்சர் அவர்களால் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையில் 3D Projection ஒளி–ஒலிக் காட்சி 30–12–2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதிகம் அறியப்படாத சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்துதல் என்கிற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் இடங்களை சுற்றுலா மையங்களாக்கிட நிதியினை ஒதுக்கி, மேம்படுத்தி 26–11–2024 அன்று தொடங்கி வைத்தார்கள்:

நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை, திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம், தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் மற்றும் வத்தல் மலை, கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை, ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஏரி, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள அரித்ராநதி படகு குழாம், திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி ஆகிய இடங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

### சுற்றுலாவின் வகைகள்!

சுற்றுலாவை ஆன்மீகச் சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, கப்பல் சுற்றுலா, ஊரகச் சுற்றுலா, சமூகப் பொறுப்புணர்வுச் சுற்றுலா, வணிகச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா. பண்பாட்டுச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, விளையாட்டுச் சுற்றுலா, இணைந்த சுற்றுலா, கேரவன் சுற்றுலா, கடற்கரை சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, திரைப்பட சுற்றுலா என இவ்வாறு பல்வேறு சுற்றுலாக்களாகப் பிரிக்கலாம்.

சுற்றுலாத் துறையில் வேலைவாய்ப்பு. உலகெங்கிலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க காரணியாக உருமாற்றும் திறன்மிக்க ஆற்றலுடன் தமிழ்நாடு சுற்றுலா விளங்குகிறது. மேலும், திறமையான வல்லுநர்கள், உள்ளூர் கைவினைஞர்கள், பயிற்சி பெற்ற வழிகாட்டிகள், சிறிய அளவிலான தொழில்முனைவோர் ஆகிய பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தனித்துவமான திறனாகவும் தமிழ்நாடு சுற்றுலா விளங்குகிறது.

## தனியார் பங்களிப்புடன் பொழுதுபோக்கு பூங்காக்கள்!

உள்நாட்டு பயணச் சந்தைகள். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில், தமிழ்நாட்டில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்துவதற்கும், நாடு முழுவதும் உள்ள சுற்றுலா பங்குதாரர்களுடனான கூட்டாண்மைகளை ஏற்படுத்துவதற்கும், 'தமிழ்நாடு சுற்றுலாத் துறை' இந்திய அளவில் நடைபெறும் பல்வேறு உள்நாட்டு பயணச் சந்தைகளில் பங்கேற்கிறது.

வெளிநாட்டு பயணச் சந்தைகள். தமிழ்நாட்டினை, ஒரு முக்கிய உலகளாவிய சுற்றுலாத் தலங்கள் நிறைந்த மாநிலமாக நிலை நிறுத்துவதற்காக தமிழ்நாடு சுற்றுலாத் துறை, சர்வதேச பயணச் சந்தைகளில் பங்கேற்று வருகிறது. சுற்றுலாத் துறையுடன், விடுதி உரிமையாளர்கள், சுற்றுலா நடத்துபவர்கள் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பயண முகவர்கள் ஆகியோர் இணை கண்காட்சியாளர்களாகப் பங்கேற்கின்றனர். இந்த நிகழ்வுகள் சர்வதேச பங்குதாரர்களுடன் வணிக சந்திப்புகளை எளிதாக்கி, ஒத்துழைப்புகளை ஏற்படுத்தி, மாநிலத்தின் சுற்றுலாத் துறையை மேலும் வலுப்படுத்த உதவுகிறது. இந்த முயற்சிகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நிலையான அதிகரிப்புக்கு பங்களித்துள்ளன.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை பின்வரும் வெளிநாட்டுப் பயணச் சந்தை மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்றுள்ளது:

இங்கிலாந்தின் லண்டன் நகரில் 5–11–2024 முதல் 7–11–2024 வரை நடைபெற்ற உலக புகழ்பெற்ற சர்வதேச சுற்றுலா மற்றும் பயணத்திற்கான வர்த்தக கண்காட்சியான உலக பயணச் சந்தையில் பங்கேற்றது. இவ்வாறு பிரான்ஸ், நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற பயண முகாம்களிலும் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றுள்ளது.

தமிழ்நாடு மருத்துவ சுற்றுலா மாநாடு!

தமிழ்நாடு பயணச் சந்தை. இந்த பயணச் சந்தை, வளமான மற்றும் மாறுபட்ட சுற்றுலா வாய்ப்புகளை வெளிப்படுத்தவும், தொழில் துறை ஒத்துழைப்பை மேம்படுத்தவும், சுற்றுலாத் துறையில் முதலீடுகளை ஈர்க்கவும், ஒரு சிறந்த தளமாக அமைந்தது.

தமிழ்நாடு மருத்துவ சுற்றுலா. 4–4–2025 அன்று இரண்டாவது தமிழ்நாடு மருத்துவ சுற்றுலா மாநாடு 2025–ல் நடத்தப்பட்டது. இந்த மருத்துவ சுற்றுலா மாநாடு, பல்வேறு சேவை வழங்குநர்கள், ஏற்பாட்டாளர்கள், வணிக முகவர்களான ஹோட்டல்கள் மற்றும் விமான நிறுவனங்கள், ஒழுங்குமுறை முகமைகள் ஆகியவற்றை உலகளாவிய ஒரே தளத்தில் கொண்டு வந்து செயல்பட வழிவகுத்தது. மேலும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புகள், சுகாதார வல்லுநர்கள் மற்றும் மருத்துவ சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பற்றி வெளிநாட்டு மருத்துவ சுற்றுலா பயணிகள் அறியவும் வழிவகுத்தது. இம்மாநாடுகளின் உதவியால் மருத்துவ சுற்றுலாவில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

2024–2025 ஆம் நிதியாண்டில் சுற்றுலாத் துறையால் செயல்படுத்தப்பட்ட மற்ற திட்டங்கள். சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு பகுதியில் ரூ.9 கோடியே 71 இலட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள மலைவாசல் தலங்களில் காட்சிமுனைகள் அமைத்தல் மற்றும் மேம்பாட்டிற்கு ரூ.11 கோடியே 47 இலட்சம் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் பகுதியில் ரூ.3 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாத்தூர் தொட்டிப்பாலம் பகுதியில் ரூ.3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் ஏரிப் பகுதியில் ரூ.4 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடிப்படை வசதிகள். அரியலூர் மாவட்டம் ஏலாக்குறிச்சி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை, திருநெல்வேலி மாவட்டம் விஜயாபதி மற்றும் தெற்கு கள்ளிக்குளம், தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பொது மற்றும் தனியார் கூட்டாண்மை திட்டங்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாத் துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் பொது மற்றும் தனியார் துறைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் தனியார் கூட்டாண்மையை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே, பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். பொது மற்றும் தனியார் துறைகளின் பலம் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி உட்கட்டமைப்பு உருவாக்கத்திற்காக பொது மற்றும் தனியார் கூட்டாண்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதவை உணவகம் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 7–1–2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2024–2025 ஆம் நிதியாண்டில் பெற்ற விருதுகள். ஒன்றிய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் சிறந்த கிராம சுற்றுலாப் போட்டியின் 2024 பதிப்பில், பாரம்பரியப் பிரிவில் தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கீழடி கிராமமும், ஆன்மிகம் மற்றும் ஆரோக்கியப் பிரிவில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மேல் கலிங்கம்பட்டி கிராமமும் சிறந்த சுற்றுலா கிராமங்களாக தேர்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்தியா டுடே சுற்றுலா ஆய்வு மற்றும் விருதுகள் 2025–ல் வழங்கப்பட்ட சிறந்த பாரம்பரிய இலக்கு பிரிவிற்கான விருதை செட்டிநாடு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் வழங்கப்படும் விருதுகள். தமிழ்நாடு சுற்றுலாத் துறை. தமிழ்நாடு சுற்றுலா விருதுகளின் 3–வது பதிப்பை 19–11–2024 அன்று சுற்றுலாப் பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இந்த விருதுகள் சுற்றுலாத் தொழில்முனைவோர் மற்றும் மாநிலத்தில் சுற்றுலா தொடர்பான செயல்பாடுகளைச் செயல்படுத்தும் சுற்றுலாப் பங்குதாரர்களை ஊக்குவிக்கும் வகையில் 15 வெவ்வெறு பிரிவுகளில் 38 விருதுகள் வழங்கப்பட்டன. இதில் சுற்றுலா நடத்துபவர்கள், விமான நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் மாநிலத்தின் சுற்றுலாவை மேம்படுத்துவதில் பங்களிக்கும் சுற்றுலா நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

## முதல்வரின் சீரிய திட்டங்களால் உலகத்தாரைக் கவரும் தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள்!

வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு, மக்களின் மகிழ்ச்சியை இலட்சியமாகக் கொண்டு சுற்றுலாத் துறைக்கு முக்கியவத்துவம் தந்து, அதிக நிதியினை வழங்கி, வழிகாட்டுதலை வழங்கி வரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சுற்றுலாத் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வரும் மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், , நிதித் துறைச் செயலாளர் த. உதயச்சந்திரன், , சுற்றுலாத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் க. மணிவாசன், , சுற்றுலா ஆணையர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மற்றும் சுற்றுலாத் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

132 வெட்டுத் தீர்மானங்களை அளித்திருக்கிறார்கள். அதனையெல்லாம் முழுமையாக படித்து பார்த்திருக்கிறேன். அதற்கான பதில் அவர்கள் நிறைவு அளிக்கும் என்ற கருத்தோடு வெட்டுத் தீர்மானங்களைத் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 அறிவிப்புகள் இருக்கின்றன.

### அறிவிப்புகள்

**1.** தமிழ்நாட்டில் உள்ள புகழ்பெற்ற முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு நவீன சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில், மாமல்லபுரத்தில் ரூ.30.00 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரியில் ரூ.20.00 கோடி மதிப்பீட்டிலும், திருச்செந்தூரில் ரூ.30.00 கோடி மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி மற்றும் நாகூர் ஆகிய இடங்களை மேம்படுத்திட ரூ.20.00 கோடி மதிப்பீட்டிலும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மொத்தம் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்

**2.** நீலகிரி மாவட்டத்தில் முக்கிய சுற்றுலாத்தலமாக விளங்கும் பைகாரா நீர்வீழ்ச்சி மற்றும் பைகாரா படகு இல்லம் ஆகியவற்றில் வாகன நெருக்கடியை சீரமைக்கும் வகையில், மேம்படுத்தப்பட்ட வாகன நிறுத்துமிடம் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

**3.** சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மற்றும் பூலாம்பட்டி (காவிரி நீர்தேக்கப் பகுதி) ஆகிய சுற்றுலாத்தலங்களில் வாகன நிறுத்துமிடம், பூங்காக்கள், உணவுக்கூடம், நடைபாதை மற்றும் தகவல் மையம் ஆகிய மேம்படுத்தப்பட்ட வசதிகள் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

**4.** திண்டுக்கல் மாவட்டம், சிறுமலைப் பகுதியை சுற்றுலாத்தலமாக மேம்படுத்தும் வகையில், ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் பூங்கா, அடிப்படை வசதிகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தப்படும்

**5.** சுற்றுச்சூழல் சுற்றுலாவை (Eco Tourism) மேம்படுத்தும் வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் மலைப்பகுதி, கோமுகி அணை, மணிமுத்தா அணை மற்றும் சேலம் மாவட்டம், கருமந்துறை பழப்பண்ணை ஏரி ஆகிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

**6.** மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான பூம்புகாரில் கூடுதல் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

**7.** திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்

**8.** கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் பிச்சாவரம் பகுதிகளில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

**9.** திருப்பூர் அமராவதி அணைப்பகுதி, கோயம்புத்தூர் ஆழியார் அணைப்பகுதி, ஈரோடு பவானிசாகர் அணைப்பகுதி, சேலம் மேட்டூர் அணைப்பகுதி, கிருஷ்ணகிரி அணைப்பகுதி மற்றும் தேனி வைகை அணைப்பகுதி ஆகிய இடங்களில் சிறந்த சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

**10.** தமிழ்நாட்டின் வரலாற்றில், புத்த மற்றும் சமண பண்பாட்டுச் சிறப்புகளை நிலை நிறுத்தும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் புத்த பண்பாட்டு மையம் மற்றும் மதுரை மாவட்டத்தில் சமண பண்பாட்டு மையம் ஆகியன அமைக்கப்படும்

**11.** நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் சுற்றுலா அனுபவங்களை வழங்கும் வகையில், கூடலூர் பகுதியின் மேம்பாட்டிற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்

**12.** சேலம் மாவட்டம், ஏற்காடு மற்றும் திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி ஆகிய இடங்களில் கம்பிவட ஊர்தி (Rope Car) அமைக்க தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்

**13.** மயிலாடுதுறை மாவட்டம், திருக்கடையூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு வளாகத்தில் கூடுதல் தங்கும் அறைகள் மற்றும் உணவகம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் அமைக்கப்படும்

**14.** மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தரங்கம்பாடிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் தங்கும் விடுதி புனரமைக்கப்படும்

**15.** திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலாத்தலமாக விளங்கும் சாத்தனூர் அணைப்பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்

**16.** சுற்றுலாத் துறையின் பல்வேறு செயல்பாடுகளை முனைப்புடன் செயல்படுத்திட "ஒருங்கிணைந்த திட்ட மேலாண்மை அமைப்பு மற்றும் "மருத்துவ சுற்றுலாப் பிரிவு ஆகியன ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்

**17.** திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில் நுட்பவியல் நிறுவனம்மூலம் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா தொழில் சார்ந்த பல்வேறு அமைப்புகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பல்வேறு கட்டங்களில் ரூ.2.00 கோடி செலவில் வழங்கப்படும்

**18.** தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு முக்கிய சுற்றுலாத்தலங்களில், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தகவல் பலகைகள், தனித்துவம் வாய்ந்த வழிகாட்டிப் பலகைகள் ஆகியன ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்

**19.** தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பு பகுதிகளில் பொது–தனியார் பங்களிப்புடன் பொழுதுபோக்கு பூங்காக்கள் அமைக்கப்படும்

**20.** தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில் பொது–தனியார் பங்களிப்புடன் தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு மற்றும் முள்ளக்காடு, திருநெல்வேலி மாவட்டம், உவரி கடற்கரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், ஆத்தங்கரை ஆகிய சுற்றுலாத்தலங்களில் நீர் சாகச விளையாட்டுகள் உள்ளிட்ட சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் பதிலுரையாற்றினார்.